


Vol.23 | No. 7 | July 2019

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்






1 JUNE 2019
KUZHANDAI ESO
ANNUAL DAY









1 JUNE 2019 | SCHOOL
TEACHERS' PSYCHOLOGY
GRADUATION KALLUVILAI

11 JUNE 2019 | ADORATION
PRAYING FOR MISSION |
BISHOP HOUSE





THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 23 No :07 JULY 2019

# இறையருள்
# IRAIARUL



## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் சுற்றுமடல் | 08 |
| மறைக்கல்வி | 14 |
| குழந்தை ஈசோ | 18 |
| இளையோர் இயக்கம் | 19 |
| இல்வாழ்வு இயக்கம் | 24 |
| சமூக சேவை சங்கம் | 26 |
| செங்கோட்டைச் செய்திகள் | 28 |
| தகவல்கள் | 30 |
| கல்விப்பணி | 31 |
| மறைவட்டச் செய்திகள் | 37 |
| Birthdays & Feastdays | 38 |
| Bishop's Engagements | 39 |

*Editorial Board*

Patron
His Excellency
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Executive Editor
**Mr. Soundara Raj**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Berlin Athencod**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443261100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250833
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/96/2019 30 June 2019

Dear and Reverend Fathers,

**Greetings from Bishop's House, Thuckalay!**

Many of the saints who adorn the Catholic Church lived their faith in an ordinary way, showing no sign of extraordinary depth of vision or spiritual power. Sanctity is not only associated with extraordinary spiritual power, but also with simple faith lived out with great commitment and generosity. St Alphonsa could not achieve something great during the 36 years of her life, but she has left behind a rich legacy which could help us attain the same heights of sanctity that she could do during her life time. For many of us, who are struggling with difficulties and challenges too heavy to carry, St Alphonsa is a great inspiration.

Born on 19 August 1910, Annakutty, as she was called,was the fourth child of Cherian Ouseph and Mary Muttathupadathu, in Kudamalloor, near Kottayam. She had a poor, difficult childhood and experienced loss and suffering early on in life. Annakutty'smother died when she was young. Her maternal aunt raised her. Her early life was one of suffering at the hands of her stern foster mother and the teasing of school children. Annakutty was educated by her great-uncle, Fr Joseph Muttathupadathu. When Annakutty was three years old, she had eczema and suffered for over a year. Again in 1923, Annakutty's feet wereburnt when she fell into a pit of burning chaff; this is considered as a self-inflicted injury inorder to avoid her foster mother's attempt to arrange a marriage forher, and thereby to fulfil her desire for becoming a religious Sister instead. This accident left her permanently disabled.

When she became in good health, Annakutty joined the Franciscan Clarist Congregation, a Religious Congregation of the Third Order of St Francis, and through them, completed her schooling. She arrived

at the Clarist Convent at Bharananganam, Kottayam district, on Pentecost Sunday of 1927. She received the postulant's veil on 2 August 1928, and in May 1929 she was assigned toteach at Malayalam High School at Vazhappally. Her foster mother died in 1930. Three days later she resumed her studies at Changanacherry, while working as a temporary teacher at a school at Vakakkad.

On 19 May 1930 Annakutty entered the novitiate of the FC Congregation at Bharananganam and received the religious habit, taking the religious name of Alphonsa of the Immaculate Conception. On 11 August 1931, she completed the novitiate and took her first vow. After her final vows,she taught highschool students at StAlphonsa Girl's High School, but was often sick and unable to teach.For most of her years as a Clarist Sister she endured serious illness.

In December 1936, it is claimed that she was cured from her ailments through the intervention of the StKuriakose Elias Chavara but on 14 June 1939 she was struck by a severe attack of pneumonia, which left her weaken. On 18 October 1940, a thief entered her room in the middle of the night. This traumatic event caused her to suffer amnesia and weakened her again. Her health continued to deteriorate over a period of months. She received extreme unction on 29 September 1941. The next day it is believed that she regained her memory, though not complete health. Her health improved over the next few years, until in July 1945 she developed a stomach problem that caused vomiting.  Eventually, she succumbed to her illness and died on 28 July 1946.

Reading through her biography, one can notice that God had a special dream for Annakutty. One fine day she had a vision of St Theresa of Lisieux and the seed of religious vocation was sown in her heart. No marriage proposals ever attracted her. Finally, seeing Annakutty's strong resistance to every marriage proposal, her aunt allowed her to join the Clarist convent at Bharananganam, Kerala.Again, she was miraculously cured by Fr.Kuriakose Elias on the ninth day of novena prayed by her and the community. Alphonsa made her solemn profession of her religious vows on 12 August 1936.

Alphonsa had sickness and pain as her companions of life. The bed of thorns and acute pain never discouraged her; instead, it helped her to rejoice in the Lord and to praise him. She realized that suffering is good and valuable for her own growth in holiness and that of the world. She became a little ambassador among her companions and novices. She encouraged them to embrace suffering cheerfully. It is remarkable to know that Alphonsa was familiar with the grain of wheat which has to fall down and decay for raising new sprout and how it has to be ground to be made into hosts which has to be transformed into the Body of Jesus. She often used to remind those around her how the grapes have to be crushed to make wine to become the blood of the Lord.

"The only thing I wish for in this life is to bear suffering for the sake of God's love and to rejoice in it. I am fully convinced that the worldly pleasures are not for me," said Alphonsa.A peep into the letters of St. Paul, great Apostle and ardent Missionary, will take us to the sense and scent of true suffering. In Rom 5:3-5, St Paul expresses very efficaciously how suffering can help to bring forth the best in a person: perseverance, character and hope because the love of God has been poured out in our hearts by the Holy Spirit who was given to us. "For when we were still without strength, in due time Christ died for us manifesting God's unconditional love for us." Thanks to her intense love for Jesus, Alphonsa knew the worth of suffering. Her constant contemplation on the suffering of Christ and her love for the crucified Lord gradually taught her to experience the Lord's personal love for her and to embrace suffering.What she wrote on 20 November 1944 to her spiritual director testifies to this. "Dear Father, as my good Lord Jesus loves me so very much, I sincerely desire to remain on this sick bed and suffer not only this, but anything else besides, even to the end of the world. I feel now that God has intended my life to be an oblation, a sacrifice of suffering."

During his Apostolic Pilgrimage to India, in his speech at Nehru Stadium, Kottayam on 8 February 1986, Pope St John Paul II spoke how from early in her life, Alphonsa experienced great suffering. "With the passing of the years, the heavenly Father gave her an ever fuller share in the Passion of his beloved Son. We recall how she experi-

enced not only physical pain of great intensity, but also the spiritual suffering of being misunderstood and misjudged by others. But she constantly accepted all her sufferings with serenity and trust in God, being firmly convinced that they would purify her motives, help her to overcome all selfishness, and unite her more closely with her beloved Divine Spouse."StAlphonsa matured through suffering. "I had aspired zealously to become a saint. I felt that burning desire after reading the autobiography of St Little Teresa of Lisieux," affirmed Alphonsa. The death of her dear mother, gradual declining of her own health and all that life offered her did help her to learn to face suffering with dignity and courage.

St.Alphonsa was a great woman of prayer. She developed a personal devotion and love for Christ. This is the fruit of her genuine faith formation. It is also the first visible sign that faith had a live experience in the childhood of Annakutty. In other words, Jesus Christ began to become a concrete personal relational reality for her. It is because of this relational realization of God's love and knowledge of Jesus Christ that Annakutty began to yearn for sanctity. The desire for sanctity was for Alphonsa a concrete response to the invitation of Christ. The surprising depth of spiritual understanding possessed by Alphonsa in her childhood teaches us all the most profound lesson on the Christian life. Spirituality and sanctity are not mere objects to yearn for but come as a result of a personal experience with Jesus Christ in the Church and in the Sacraments.

Pope Benedict XVI has expressed it eloquently in his homily at her canonization. He recalled Saint Alphonsa's life as one of extreme physical and spiritual suffering: "This exceptional woman ... was convinced that her cross was the very means of reaching the heavenly banquet prepared for her by the Father. By accepting the invitation to the wedding feast, and by adorning herself with the garment of God's grace through prayer and penance, she conformed her life to Christ's and now delights in the 'rich fare and choice wines' of the heavenly kingdom. ... (Her) heroic virtues of patience, fortitude and perseverance in the midst of deep suffering remind us that God always provides the strength we need to overcome every trial."

Saints have amazing ways to reach out to those on earth. While they were alive they had been so much part of this world that now from heaven above their eyes are turned towards us. After the ceremony in St Peter's Square, Rome, Pope Benedict had a message in English for the 5,000 Indians in the crowd of tens of thousands: "As the Christian faithful of India give thanks to God for their first native daughter to be presented for public veneration, I wish to assure them of my prayers during this difficult time." He added: "I urge the perpetrators of violence to renounce these acts and join with their brothers and sisters to work together in building a civilisation of love."

As we are preparing to celebrate the feast of St Alphonsa, let us emulate some of the important virtues that she excelled in – her attitude towards suffering and her life of prayer. May St.Alphonsa intercede for each one of us! May she pray for our Church that is going through many trials and difficulties!

## CONCLUSION

On 3 July, we shall celebrate Dukhrana wherein we remember the founder of our Church, St Thomas the Apostle. He is considered the doubting apostle but he makes the great profession of Faith, "My Lord and My God".St.Thomas confesses Jesus in the very words ("My Lord and my God") used by the Psalmist for Yahweh. Raymond Brown calls this "the supreme Christological pronouncement of the Fourth Gospel." Here, the most outrageous doubter of the resurrection of Jesus utters the greatest confession of belief in the Lord who rose from the dead. This declaration by St. Thomas is very significant for us for two reasons. 1) It is the foundation of our Christian Faith. Our Faith is based on the Divinity of Jesus as proved by his miracles, especially by the supreme miracle of his resurrection from the dead. Thomas' profession of Faith is the strongest evidence we have of the resurrection of Jesus. 2) Thomas' Faith culminated in his self-surrender to Jesus, his heroic missionary expedition to India in A.D. 52, his fearless preaching, and the powerful testimony given by his martyrdom in A.D. 72. We are the great beneficiaries of his ministry. As we celebrate the

feast of St Thomas, let us entrust ourselves to his intercession of St. Thomas that we may be strengthened in our faith in the risen Lord and may give witness to him in whatever form of ministries we are engaged in.

With my prayers and blessings,

Yours in Christ Jesus

+ George Rajendran SDB
Bishop of Thuckalay

---

## ஆயரின் முதல் துறவற வார்த்தைப்பாட்டின் வெள்ளி விழா

ஆயரின் முதல் துறவற வார்த்தைப்பாட்டின் வெள்ளிவிழா கொண்டாட்டமானது ஜூன் 5, 2019 அன்று கல்லுவிளையில் வைத்துச் சிறப்பாக நடத்தப்பட்டது. ஆயர் அவர்கள் தலைமையில், சீனாய் இல்லத்தில் வைத்து நடைபெற்ற திருப்பலியில் மறைமாவட்டத்தைச் சார்ந்த குருக்களும் துறவறத்தாரும் பொதுநிலையினரும் பங்கேற்றார்கள். தொடர்ந்து ஆசீர் அரங்கத்தில் வைத்து வாழ்த்தரங்கம் நடைபெற்றது. இதில், குழித்துறை மறைமாவட்ட ஆயர் மேதகு ஜெரோம்தாஸ் வறுவேல் சச அவர்களும், கோட்டாறு மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு பீட்டர் ரெமீஜியூஸ் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று சிறப்பித்தார்கள்.

## 'துக்ரானா' திருநாள்

நம்முடைய சபையின் தந்தையாகிய மார்த்தோமாவின் நினைவு நாள் ஜூலை 3 அன்று அனுசரிக்கப்படுகிறது. சீரோ மலபார்க் கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரைக்கும் இது கடன் திருநாள். ஆதலால், அனைத்து இறைமக்களும் அன்றைய தினம் திருப்பலியில் தவறாது பங்கேற்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

## Circular letter No/R/15/2019

### ஆயர் சுற்றுமடல்

'இளையோர் மாநாடு பற்றிய சுற்றுமடல்'

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

இம்மாதம், ஜூன் 7, 8 மற்றும் 9 ஆம் தேதிகளில் மறைமாவட்ட இளையோர் மாநாடு நடைபெறுவது பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்நிகழ்வானது, சூசைபுரம் தூய அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து நடைபெறுகிறது.

இம் மாநாட்டின் மையச் சிந்தனையாக, 'ஆபேல்: நான் என் சகோதரியின்/ சகோதரனின் காவலாளி' ஆகும். இச்சிந்தனையை நாம் திருவி–விலியத்தில் தொடக்கநூல் 4 ஆம் அலகில் பார்க்கிறோம்.

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இரு புதல்வர்கள் இருந்தார்கள், மூத்தவன் காயின் இரண்டாமவன் ஆபேல். காயின், ஆபேல் மீது கடுங்கோபம் கொண்டு கொன்றான். சொந்த சகோதரனால் ஆபேல் கொல்லப்படுகின்றான். கொலை செய்து விட்டு திரும்பும் போது, கடவுள் காயினிடம் ஆபேலைக் குறித்து விசாரித்தார். காயின், "நான் என்ன, என் சகோதரனுக்குக் காவலாளியா?" எனக் கடவுளிடம் எதிர் கேள்வி எழுப்பினான். கடவுள் உடனே பதிலாக, "நீ என்ன செய்துவிட்டாய்! உன் சகோதரனின் இரத்தத்தின் குரல் மண்ணிலிருந்து என்னை நோக்கிக் கதறிக்கொண்டிருக்கிறது" என்று கூறுகிறார்.

ஆபேலை பாதுகாக்கவும் அவனுக்குக் காவலாக இருக்கவும் கடவுள் காயினுக்குப் பொறுப்பு அளித்திருந்தார். அதாவது, காயின்

ஆபேலின் காவலாளி. இதைக் கடவுள் உலகின் தொடக்கத்திலேயே ஏற்படுத்தியிருந்தார். இது அனைத்து மனிதருக்கும் பொருந்தும். மானிடர் அனைவரும் ஒரே கடவுளின் பிள்ளைகள் என்பது திருவிவிலியம் உணர்த்தும் மிகப்பெரிய உண்மை. "பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே..." என்னும் ஆண்டவர் கற்பித்த மன்றாட்டை ஏறெடுக்கும் போதெல்லாம், மனிதர் அனைவரும் ஒரேக் கடவுளின் பிள்ளைகள் என்பது திரும்பத் திரும்ப பறைசாற்றப்படுகிறது. இச்சிந்தனையோடு நாம், ஆபேலின் கொலையையும் இணைத்துப் பார்க்கும் போது, 'நாம் ஒவ்வொருவரும் சக மனிதர்களின் காவலாளிகள்' என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. இச்சிந்தனைக்குள் ஆழமான இறையியல் உண்மையும் உண்டு.

கடவுளின் பிள்ளைகளாக இருக்கின்ற மானிடர் அனைவரும் கடவுளின் உருவைப் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் திருவிவிலியம் நமக்கு சொல்லித்தருகிறது. இதை நாம் தொடக்கநூல் ஒன்றாம் அதிகாரம் 27 ஆம் இறைவார்த்தையில் பார்க்கிறோம். இந்த பழைய ஏற்பாட்டு இறையியல் உண்மையானது, புதிய ஏற்பாட்டில் மேலும் அழுத்தம் பெறுகிறது. இதைக் குறித்து இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம், "இறைமகனாகிய இயேசு தாம் மனிதராக பிறந்ததால் ஒவ்வொரு மனிதரோடும் ஒருவகையில் தம்மையே ஒன்றித்துள்ளார்" என்கிறது (இன்றைய உலகில் திருச்சபை 22). ஆக, இறைமகனாகிய இயேசுவின் இயல்பு ஒவ்வொரு மனிதரும் பெற்றிருக்கிறார் என்பதை திருச்சபை முன்வைக்கிறது. கடவுளின் சாயலும் இறைமகனின் இயல்பும் பெற்றிருக்கின்ற ஒவ்வொரு மனிதரையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு.

மேற்கூறிய இவ் இறையுண்மைகளுக்கு உயிரூட்டம் கொடுக்கும் நோக்கில் இளையோர் மாநாடு நடத்தப்பட இருக்கிறது. மனித நேயமும் சகோதர பாசமும் குறைந்து தன்னலம் முதன்மைப் பெற்றிருக்கும் காலகட்டத்தில் வாழ்கிறோம். மேலும் சக மனிதருக்கு ஏற்படும் துயரங்களை கண்டுகொள்ளாத மனநிலையும் பெருகி வருகிறது. இச்சூழலில் இம்மாநாடு மிகவும் அவசியமாகிறது.

ஆபேல் என்னும் சொல்லுக்கு, உயிர்க்காற்று என்னும் பொருளும் உண்டு. அவ்வகையில் ஒவ்வொரு மனிதரும் நமது உயிர் வாழ்வுக்கு அவசியமாக இருக்கின்ற

உயிர்க்காற்றுக்கு நிகராக இருக்கிறார். சக மனிதர் இன்றி வாழ்வு சாத்தியமாகாது என்பதை இம்மாநாடு வலியுறுத்துகிறது. இச்சகோதர உணர்வை வளர்க்கும் நோக்குடன் நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. கூடி செபித்தல் வழியாக இயேசுவை உள்ளத்தில் ஏற்று அவரை அன்பு செய்தல்; கூட்டாக இணைந்து செபித்து, உண்டு, நிகழ்வுகளை ஒருங்கிணைத்து சகோதர அன்பை வளர்த்தல்; இயேசுவுக்காகவும் திருச்சபைக்காகவும் சமூகத்திற்காகவும் திறமைகளை வெளிப்படுத்தி அதன் வழியாய் சகோதர அன்பின் உணர்வுகளை சொந்தமாக்குதல் என்னும் குறிக்கோள்களோடு இம்மாநாடு நடக்க இருக்கிறது.

**1. இயேசுவை இளையோர் உள்ளத்தில் வளர்த்தல் - ஆன்மீக நிகழ்வுகள்**

"என் பிள்ளைகளே, உங்களில் கிறிஸ்து உருவாகும்வரை உங்களுக்காக நான் மீண்டும் பேறுகால வேதனையுறுகிறேன்" (கலா 4:19) எனத் தூய பவுல் கூறுகிறார். பவுலடியாரின் இவ்வார்த்தைகள் இம்மாநாட்டின் முதன்மை நோக்கமாக இருக்கும். "மனித வாழ்வின் தனித்தன்மை இயல்பாக வெளிப்படும் பருவம் இளமை. அப்பருவத்தில் இயேசுவும் வாழ்ந்தார்" எனக் கூறும் இளையோருக்கான ஆயர் பேரவை "இளையோருக்கு முன்மாதிரியாகவும் அவர்களை கடவுளுக்கு அர்ப்பணமாக்கும் பொருட்டும் 'இயேசு இளையோரிடையே ஓர் இளைஞராக' இருக்கிறார்" (கிறிஸ்து வாழ்கிறார் 2) எனவும் கூறுகிறது. தன்னலமற்ற மாசற்ற அன்பின் மாதிரியாகத் திகழும் இயேசு, அவ்வாழ்வின் மேன்மையையும் அழகையும் தன் வாழ்க்கை வழியாக காட்டினார். இவரின் அடிச்சுவடுகளை பின்பற்ற இளையோருக்கு பயிற்சி அளிக்க இளையோர் மாநாடு தேவையானவற்றை செய்ய இருக்கிறது.

**2. சகோதர அன்பை வளர்க்கும் கூடி வாழ்தல்**

இயேசுவை பின்பற்ற விரும்பிய சீடர்களிடம் இயேசு, "வந்து பாருங்கள்" என்று கூறினார். அவரோடு சென்று அவரோடு சேர்ந்து வாழ்ந்த சீடர்கள் இயேசுவின் சீடர்களாக மாறியதாக யோவான் நற்செய்தியில் நாம் பார்க்கிறோம். மேலும், வாழ்வின் இலக்கை அறியாமல் எருசலேமிலிருந்து விலகிச் சென்ற சீடர்களோடு சேர்ந்து பயணித்த இயேசு, அவர்களுக்கு நம்பிக்கையின் பாடங்களைக் கற்றுக் கொடுத்து திரும்பவும் வாழ்வுக்கு அழைத்து

வந்தார். இயேசுவோடு சேர்ந்து உறவாடியதன் விளைவாகவே இது நடக்கிறது. இயேசுவோடு சேர்ந்து வாழ்வதன் அருமையை சீடர்களுக்கு உணர்த்தி இருந்தார். "ஆண்டவரே, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைக்கட்டுமா?" (17:4) என்னும் பேதுருவின் வார்த்தை இதன் வெளிப்பாடாகப் பார்க்கலாம்.

முகாம் நாட்களில் இயேசுவின் அன்பை உணரவைக்கும் நிகழ்வுகளின் வழியாக இளையோர்கள் கடந்து செல்வார்கள். அன்பின் சூழலில் இளையோர்கள் இயேசுவின் மனப்பான்மைக்கு வழிநடத்தப்படுவார்கள். அதன் வழியாக அவர்கள் வழியாக மலரும் உறவுகள் தூய்மை மிக்கதாய் அமையும். ஆண்களும் பெண்களும் ஒரே கடவுளின் பிள்ளைகள் என்னும் மனப்பாங்கைப் பெற்று, நற்சமூகம் உருவாக்குவதன் விதைகளை தங்களுக்குள் விதைக்க ஆரம்பிப்பார்கள். இது இம்முகாமின் இரண்டாவது நோக்கமாக அமையும்.

**௩. தலைவர்களாக உருவாதல்**

உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள் என்று கூறிய இயேசுவின் வார்த்தைகளுக்கு உயிரூட்டம் கொடுக்க வேண்டியது இளையோரின் கடமையாக உள்ளது. நற்தலைவர்களாக உருவாகி, திருச்சபைக்கும் சமூகத்திற்கும் சேவை செய்ய இம்மாநாடு பேருதவியாக இருக்கும். நிகழ்வுகள் அனைத்தையும் இளையோர் ஒருங்கிணைப்பதால், இயல்பாக தலைமைத்துவ பண்புகள் அவர்களுக்குள் உருவாகும். இது இம்மாநாட்டின் மூன்றாவது நோக்கம்.

மேற்கூறிய நோக்கங்களின் அடிப்படையில் மூன்று நாட்களாக நடக்கும் இம்மாநாட்டின் நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன அவற்றைக் கீழ்க்காண்போம்.

இம்மாநாடு சூசைபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து நடைபெறும். இளைஞர்கள் தங்குவதற்கென கல்லூரியும், இளம்பெண்கள் தங்குவதற்கென, ஞயுஞ அருட்சகோதரிகள் நடத்தும், கல்லூரியோடு இணைந்துள்ள விடுதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இளையோரின் ஆன்மீக ஊக்குவிப்பாளரான அருட்சகோதரி லின்சிட்டா ஊஆஊ தலைமையில் அருட்சகோதரிகள் உடன் இருப்பார்கள்.

முதல் இரண்டு நாட்களும்,

ஜூன் 7 மற்றும் 8 தேதிகளில், தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வத் தொண்டர்களும், கலைநிகழ்ச்சிகள் கொடுக்கின்றவர்களும், முகாமில் பங்கேற்க விரும்பும் இதர உறுப்பினர்களும் (3 ஆம் தேதிக்குள் இறுதி பெயர் பட்டியல் இளையோர் இயக்க அலுவலகத்தில் தெரிவிக்க வேண்டும்) அனுமதிக்கப்படுவார்கள். முகாமில் பங்கேற்போர், முகாமுக்குரிய நிபந்தனைகளுக்கு ஏற்ப நடத்தல் அவசியம். 7 ஆம் தேதி மாலை இளையோரின் ஒருங்கிணைக்கும் திறன் வளர்ப்பதற்கும், இளையோர் மாநாட்டிற்கு ஒரு சமூகப் பார்வை வழங்கவும் மறைமாவட்டத்தைச் சாராத இளையோருக்கு நடனப்போட்டி நடத்தப்படுகிறது.

9ஆம்தேதிஞாயிற்றுக்கிழமை, மறைமாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து இளைஞர்களும் பங்கேற்க அழைக்கப்படுகிறார்கள். அன்று காலை 8.30 மணி தொடங்கி, இளையோருக்கான எழுச்சி உரை, ஒப்புரவு அருளடையாளம், ஆராதனை, ஆயரின் உரை ஆகியவை மதியம் வரை நடைபெறும்.

பிற்பகலில் 2.30 மணிக்கு நடைபெறும் ஆடம்பரமான திருப்பலியிலும், தொடர்ந்து நடைபெறும் கலைநிகழ்ச்சிகளிலும் தக்கலை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து இறைமக்களும் அழைக்கப்படுகிறார்கள். அரங்கின் முன் பகுதி இளையோர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும். திருப்பலியில் அனைத்து இளையோர்களும் கலாச்சார உடைகளை (சேலை, வேட்டி) அணிய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நிகழ்வுகள் இரவு 9 மணிக்கு முடிவுறும்.

மாநாட்டிற்காக செப உதவியும், பொருளாதார உதவியும், பிற உதவிகளும் அளிக்கின்ற அனைத்து அருட்தந்தையர்களுக்கும் அருட்சகோதரிகளுக்கும் பொதுநிலையினருக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறேன்.

மறைமாவட்டத்தை அன்பு செய்யும் புதுத்தலைமுறை உருவாக நாம் அனைவரும் கருத்தொற்றுமையுடன் செயல்படுவோம். இயேசுவின் இளமையின் முகம் ஒளிரட்டும்.

அன்புமிக்க அருட்தந்தையர்களே அருட்சகோதரிகளே, இறைமக்களே, இச்சுற்றுமடலோடு சேர்ந்து வருகின்ற பெந்தகோஸ்தே திருவிழாவுக்கான ஆயத்தத்தைக் குறித்து உங்களை நினைவூட்ட விழைகின்றேன்.

வருகின்ற ஜூன் மாதம் 9 ம் தேதி திருச்சபை பெந்தகோஸ்தே

அதாவது தூய ஆவியார் அப்போஸ்தலர்கள் மேல் இறங்கி வந்ததை நினைவூட்டும் திருவிழாவை திருச்சபை கொண்டாடுகிறது. "தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். அவர் வரும்போது என்னைப்பற்றிச் சான்று பகர்வார்" (யோவான் 15: 26) என்ற ஈசோ மெசியாவின் வாக்குறுதியின்படி ஈசோ மெசிகா உயிர்த்த 50 வது நாள் அப்போஸ்தலர்கள் மீது தூய ஆவியைப் பொழிந்ததை இத்திருவிழா நினைவூட்டுகிறது. திருச்சபையிலும் ஞானஸ்நானம் வழியாக நம்மிலும் இத்தூய ஆவியார் செயலாற்றி வருகிறார். இத்தூய ஆவியாரை தகுந்த ஆயத்தத்தோடு நாம் பெற்றுக்கொள்ள நம்மையே கீழ்க்காணும் ஏதேனும் உகந்த முறை ஒன்றை தேர்ந்தெடுத்து பங்களவில் மேற்கொள்ள உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

1. ஈசோவின் விண்ணேற்றம் முதல் பெந்தேகோஸ்தே வரை சிறப்பு நவநாள் நடத்துதல்.
2. திருப்பலிக்கு முன் அரை மணி நேரம் திவ்விய நற்கருணை ஆராதனை நடத்துதல்
3. ஜூன் 7 அன்று தூய ஆவியாரைப் பற்றிய மறையுரையோடு சிறப்பு ஆராதனை நடத்துதல்
4. ஜூன் 7 அன்று இரவு கண்விழிப்பு ஆராதனை.
5. ஜூன் 7 அன்று சீனாய் தியான இல்லம், கல்லுவிளையில் வைத்து சிறப்பு கண்விழிப்பு ஆராதனை நடைபெறும்
6. ஜூன் 9 அன்று ஆடம்பரத் திருப்பலியும் மறையுரையும்

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

**என்றும் ஈசோ மெசியாவில்**

**+ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் ஷிஷிபி**
**தக்கலை மறைமாவட்ட ஆயர்**

இந்த சுற்றுமடலை 2.06.2019 ஞாயிறு திருப்பலிக்கு இடையே வாசிக்கவும்.



# CATECHISM
# மறைக்கல்வி

"என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே உறுதியோடு இருங்கள். நிலையாய் நில்லுங்கள் ஆண்டவருக்காக நீ உழைப்பது வீண் போகாது என்பதை அறிந்து ஆண்டவரின் பணியை இன்னும் அதிகமாக எப்போதும் செய்யுங்கள்."
(1 கொரிந்தியர் 15-58)

**அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துகள்!**

**மறைக்கல்வி ஆண்டுவிழா**

2018-2019 ஆம் ஆண்டின் மறைக்கல்வி ஆண்டுவிழா ஜூன் 16 ஞாயிற்றுக்கிழமை ஆசீர் அரங்கில் வைத்து பிறபகல் 2 மணி முதல் 5.00 மணி வரை நடைபெற்றது. முதலில் மாங்கரை மறைக்கல்வி மாணவர்களால் ஆயர் மற்றும் சிறப்பு விருந்தினர்களுக்கு வரவேற்பு வழங்கப்பட்டது. தொடர்ந்து ஆண்டு விழா பொதுக்கூட்டம் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. மறைக்கல்வி முன்னாள் இயக்குநர் அருட்தந்தை சனில் பந்தி-சிறைக்கல் அவர்களும் தற்போது பொறுப்பேற்ற இயக்குநர் அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்களும் உதவி இயக்குநர் தந்தை ஸாஜன் நெட்டபெங்கு அவர்களும் அருட்சகோதிரி ஜெயின் மரியா அவர்களும் ஊக்குவிப்பாளர் மரியதாஸ் அவர்களும் உடனிருந்நனர். மேடையை அலங்கரித்தவர்கள் குத்துவிளக்கேற்றி விழாவினை துவங்கி வைத்தார்கள். இயக்குநர் அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்கள் விழாவிற்கு வருகை தந்த சிறப்பு விருந்தினர்கள் மற்றும் அனைவரையும் வரவேற்று பேசினார். தொடர்ந்து ஊக்குவிப்பாளர் திரு. மரியதாஸ் அவர்கள் 1 வருடம் மறைக்கல்வி இயக்குநராக பணியாற்றிய அருட்தந்தை சனில் பந்தி-சிறைக்கல் அவர்களுக்கும் 15 வருடங்கள் மறைக்கல்வி செயலராக பணியாற்றிய அருட்சகோதிரி ஜெயின் மரியா S.H அவர்களுக்கும் நன்றி கூற மறைக்கல்வி நிலையத்தின் சார்பாக நினைவுப் பரிசு ஆயர் அவர்களால் வழங்கப்பட்டது. அருட்தந்தை சனில் அவர்கள் இயக்குநராக பணி புரிந்த போது ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றியும் வாழ்த்தும் கூறினார்.

**ஜூபிலி கொண்டாட்டம்** - மறைக்கல்வி ஆசிரியராக 40 ஆண்டுகள் பணிபுரிந்து ஜூபிலி கொண்டாடும் ஆசிரியர் சாலம்மாள் அவர்களுக்கு ஊக்குவிப்பாளர் திரு. செல்வகுமார் அவர்கள் வாழ்த்துரை கூற ஆயர் அவர்கள்

நினைவுப் பரிசு வழங்கினார். ஆயர் அவர்கள் மறைக்கல்வியின் வளர்ச்சிக்கு ஒத்துழைக்கின்ற அனைவருக்கும் வாழ்த்துக்கள் கூறி தலைமையுரை ஆற்றினார். இடையிடையே மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன. அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என சுமார் 750 க்கும் மேற்பட்டோர்கள் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**சான்றிதழ்**

வினாடி வினா மற்றும் போட்டித் தேர்வில் முதலிடம், இரண்டாவது இடம், மூன்றாவது இடம் பெறும் மாணவர்களுக்கு உதவித்தொகையும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

A, B, C பிரிவுகளின் முதலிடம், இரண்டாவது இடம், மூன்றாவது இடம் பெற்ற மறைக்கல்வி நிலையங்களுக்கான சுழற்கோப்பையும் சிறந்த மறைக்கல்வி நிலைய ஆசிரியர்களுக்கான சுழற்கோப்பையும் இனிப்புகளும் ஆயரால் வழங்கப்பட்டது. ஊக்குவிப்பாளர் திரு விஜயராஜன் அவர்கள் நன்றி கூற படந்தாலுமூடு மறைக்கல்வி மாணவிகளின் பாப்பரசர் கீதத்துடன் 5 மணிக்கு ஆண்டு விழா இனிதே முடிவுற்றது. மறைக்கல்வி நிலையத்தின் வளர்ச்சிக்காக உழைத்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், தலைமையாசிரியர்கள் மற்றும் ஊக்குவிப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் பாராட்டுகளும் நன்றியும் தெரிவிப்பதோடு தொடர்ந்து ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று அன்பாய் வேண்டுகிறேன்.

**ஊக்குவிப்பாளர்களின் கூட்டம்**

நமது மறைக்கல்வி நிலைய ஊக்குவிப்பாளர்களின் கூட்டம் ஜூன் 22 சனிக்கிழமை 6 மணிக்கு இயக்குநர் அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்களின் தலைமையில் படந்தாலுமூடு திரு இருதய மேனிலைப்பள்ளியில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தின் போது மறைக்கல்வி நிலையங்கள் பார்வையிடுவதற்கான படிவமும் பார்வையிட வேண்டிய மறைக்கல்வி நிலையங்களைப் பற்றிய விபரம் அடங்கிய படிவமும் வழங்கப்பட்டது.

## Re - Exam - மறு தேர்வு

மறைக்கல்வி மாணவர்களின் Re - Exam – 23 ஞாயிறு பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரை படந்தாலுமூட்டில் வைத்து

நடத்தப்பட்டது இத்தேர்வில் 105 மாணவர்கள் பங்கு பெற்றனர்

**வரவிருக்கும் நிகழ்வுகள்**

மறைக்கல்வி தலைமையாசிரியர்களின் கூட்டம் ஆகஸ்ட் 10 சனிக்கிழமை கல்லுவிளை நற்செய்தி நிலையத்தில் வைத்து நடைபெறும்.

- ஆண்கள் மற்றும் பெண்களுக்கான நாடக நகல் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய கடைசி நாள் ஆகஸ்ட் 10.
- **ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு** - ஆகஸ்ட் 18 ஞாயிற்றுக்கிழமை தக்கலை பிலாங்காலை மறைவட்ட கருத்தரங்கு பிலாங்காலை பங்கில் வைத்து 2 மணிக்கு நடைபெறும்
- **ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு** - ஆகஸ்ட் 25 ஞாயிற்றுக்கிழமை மஞ்சாலுமூடு மறைவட்ட கருத்தரங்கு மஞ்சாலுமூடு பங்கில் வைத்து 2 மணிக்கு நடைபெறும்

**சிறந்த மறைக்கல்வி நிலையங்களின் பெயர்கள் பின் வருமாறு**

SECTION A

| RANK | NAME | POINT |
|---|---|---|
| I | St. Little Flower Sunday School, Manjalumoodu | 647 |
| II | Jaya Matha Sunday School, Nithiravilai | 590 |
| III | St. James Sunday School, Mangarai | 588 |
| IV | St. Joseph Sunday School, Soosaipuram | 586 |
| V | Holy Cross Sunday School, Malaicode | 539 |

SECTION B

| RANK | NAME | POINT |
|---|---|---|
| I | Deva Matha Sunday School, Killiyoor | 586 |
| II | St. Thomas Sunday School, Marappady | 560 |
| III | Holy Family Sunday School, Arukany | 558 |
| IV | St. Alphonsa Sunday School, Nagercoil | 545 |
| V | St. Micheal Sunday School, Kattathurai | 527 |

SECTION C

| RANK | NAME | POINT |
|---|---|---|
| I | St. Thomas Sunday School, Pathukany | 543 |
| II | Christ The King Sunday School, Paraicode | 512 |
| III | St. Mary Sunday School, Thuckalay | 488 |
| IV | Holy Family Sunday School, Thackalivilai | 474 |
| V | St. George Sunday School, Anayadi | 473 |

அருட்தந்தை பிரின்ஸ் மாலியில்

இயக்குநர்

## டிஎன் குளம், கயத்தாறு திருத்தொண்டு நிலைய தொடக்கம்

டிஎன் குளம், கயத்தாறு திருத்தொண்டு நிலைய தொடக்கமானது ஜுன் 12, 2019 அன்று நடைபெற்றது. இப்பகுதி, தக்கலை மறைமாவட்டத்தின் விரிவாக்கப்பட்ட பகுதிக்குட்பட்டது. எப்.சி.சி. துறவறச் சபையின் மாகாணத் தலைவி, அருட்சகோதரி ஆன்சிலின் அவர்கள், ஏற்கனவே கயத்தாறில் பணியாற்றும் அருட்தந்தை றோய் அவர்களின் துணையுடன் துறவற இல்லமும், திருத்தொண்டுப் பணிகளும் தொடங்க, போதிய ஏற்பாடுகளைச் செய்தார். டின் குளம் கிராமத்தில் 100 குடும்பங்கள் உள்ளன. அருட்சகோதரிகள் லைசா எப்.சி.சி மற்றும் லின்சி எப்.சி.சி ஆகியோர் இவ்வில்லத்தில் தங்கி தங்கள் பணிகளை மேற்கொள்வார்கள்.

## திருநெல்வேலி திருத்தொண்டுத் தளத்தில், நோய்த்தணிப்பு சேவை

திருநெல்வேலிப் பகுதியில், திருத்தொண்டுப் பணிகள் தொடங்கப்பட்டு ஓராண்டு நிறைவடையும் வேளையில், தீராத நோய்களால் பீடிக்கப்பட்டு தனித்து தவிக்கும் எளிய மக்களுக்காக நோய்த்தணிப்பு சேவையானது தொடங்கப்பட உள்ளது. இப்பணியை மேற்கொள்ள எஸ்.ஏ.பி.எஸ் அருட்சகோதரிகளான டெஸி, வினீதா மற்றும் லிஸா ஆகியோர் முன்வந்துள்ளனர். இவர்கள் தங்குவதற்கான வீடும், அவசர ஊர்தியும் ஜுன் 15. 2019 அன்று ஆயர் அவர்களால் மந்திரிக்கப்பட்டது. திருநெல்வேலி பகுதியில், அருட்தந்தையர் ஜினோய் மற்றும் அலெக்ஸ் ஆகியோரின் முயற்சியால், சீரோ மலபார் சமூகமானது உருவாக்கப்பட்டுள்ளது. எஸ்.ஏ.பி.ஸ். துறவறத்தாரின் துணைமாகாணத் தலைவி அருட்சகோதரி ஆன்சிட் அவர்கள் நோய்த்தணிப்பு சேவையை மறைமாவட்டத்தின் துணையுடன் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

"குழந்தைகளே உங்கள் தந்தையாகிய எனக்கு செவிசாயுங்கள். நான் கூறுவதன் படி செயல்படுங்கள். அப்பொழுது காப்பாற்றப்படுவீர்கள்."

(சீராக்கின் ஞானம் 3 - 1)

**அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்**

**குழந்தை ஈசோ இயக்கம் ஆண்டு விழா**

2018-2019 ஆம் ஆண்டின் குழந்தை ஈசோ இயக்க ஆண்டு விழா ஜூலை 1 சனிக்கிழமை கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் வைத்து மதியம் 2.30 மணிக்கு நமது மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. இயக்குநர் அவர்களின் வரவேற்புரையை தொடர்ந்து மாறப்பாடி புனித தோமையார் ஆலய குழந்தைகள் இறைவணக்க நடனம் ஆடினர். பின்னர் குத்துவிளக்கேற்றல் நிகழ்வு நடைபெற்றது. ஆயர் அவர்கள் குழந்தைகளின் வளர்ச்சி பற்றி தலைமையுரை வழங்கினார். தொடர்ந்து குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

**பரிசு வழங்குதல்**

பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற கலைவிழாவில் வெற்றி பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் ஆயர் அவர்கள் பரிசுகள் வழங்கினார். பின்னர் நன்றியுரை மற்றும் குழந்தை ஈசோ இயக்க கீதத்துடன் சுமார் 4 மணியளவில் ஆண்டு விழா இனிதே நிறைவடைந்தது.

**அருட்தந்தை ஜோமோன்**
**மங்கலாமடத்தில், இயக்குநர்**

---

# கீழ ஆம்பூர் திருத்தொண்டுத் தளம்

அம்பாசமுத்திரம் அருகில் கீழ ஆம்பூர் என்னும் ஊரில், சி.எம்.சி அருட்சகோதரிகள், இல்லம் ஒன்றை ஆரம்பித்து திருத்தொண்டுப் பணிகளை முன்னெடுக்கிறார்கள். இவ்வில்லம் ஜூன் 24, 2019 அன்று ஆயர் அவர்களால் மந்திரிக்கப்பட்டது. இவ்வில்லத்தில் சி.எம்.சி அருட்சகோதரிகளான, லிபியா, ரீஜா மற்றும் எல்சீனா ஆகியோர் தங்கி பணிகளைச் செய்வார்கள்.

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

**இளையோர் மாநாடு - 2019 ஆபேல்**

ஆபேல் என்னும் மையக்கருத்தோடு இளையோர் மாநாடு 2019 ஆனது 2019 ஜூன் மாதம் 7 முதல் 9 வரை, கருங்கல் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து நடைபெற்றது. நிகழ்வுகள் 9 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்கியது. சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் கொடியும், தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்கத்தின் கொடியும், ஆபேல் மையக்கருத்தை விளக்கும் கொடியும் முறையே, குருகுலமுதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில், பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் மற்றும் பேரருட்தந்தை குரியாக்கோஸ் அறக்காப்பறம்பில் ஆகியோரால் ஏற்றப்பட்டன. தொடர்ந்து குருகுல முதல்வரின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. தொடக்க நிகழ்வில் 150 இளையோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து இளையோருக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. தன்னார்வத் தொண்டர்களுக்கான பயிற்சிகளும், இறுதி நாளில் கலை வடிவம் கொடுப்போர்களுக்கான கலந்தாய்வுகளும் நடைபெற்றன. மதிய உணவுக்குப் பின், கலை நிகழ்ச்சிகள் கொடுக்காத மாணவர்களுக்கென, DOCAT வகுப்புகள் நடத்தப்பட்டன. இவ்வகுப்பை அருட்தந்தை அனலின் அவர்கள் வழிநடத்தினார்கள். தேனீர் இடைவேளைக்குப் பிறகு, மாலைநேர நடனப்போட்டிகளுக்கான தயாரிப்புகள் நடைபெற்றன. நடனப்போட்டி மாலை 7.30 மணி அளவில் ஆரம்பமானது. இப்போட்டிகளில் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களைச் சேர்ந்த 6 குழுக்கள் கலந்து கொண்டன. மிகச் சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வில், தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன், கருங்கல் அல்போன்சா கலை

மற்றும் அறிவியல் கல்லூரி தாளாளர் பேரருட்தந்தை ஆன்டணி ஜோஸ் ஆகியோர் கலந்து கொண்டதோடு, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்கினார்கள். முகாமில் பங்கேற்ற அனைவருக்காகவும் பகுப்பாய்வு நடந்தது. தொடர்ந்து இரவு செபத்துடன் அன்றைய தினம் முடிவடைந்தது.

முகாமின் இரண்டாம் நாளைய நிகழ்வுகள் காலை 8 மணிக்கு காலை செபத்துடன் ஆரம்பமானது, தொடர்ந்து திருப்பலி நடைபெற்றது. திருப்பலியை இயக்குநர் தந்தை அவர்கள் ஒப்புக்கொடுத்தார்கள். காலை உணவுக்குப் பின், கிறிஸ்து வாழ்கிறார் (CHRISTUS VIVIT) என்னும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது அறிவுரை மீதான கருத்தரங்கம் நடைபெற்றது. இதை, மரியகிரி மலங்கரை கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தாளாளர் பேரருட்தந்தை ஜோசப் பிரைட் அவர்கள் வழிநடத்தினார்கள்.

மதிய உணவுக்குப் பின்னர், ஞிளி-சிகிஜி வகுப்புகள் எடுப்பதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இதை அருட்தந்தை டென்சி முண்டுநடக்கல் அவர்களும், அருட்தந்தை ஜான் பால் அவர்களும் வழிநடத்தினார்கள். மாலை, 5.30 மணிக்கு செபமாலை பவனியானது, கல்லூரியின் முதன்மை வாசலிலிருந்து தொடங்கி நடத்தப்பட்டது. அது, கல்லூரியின் நுழை வாயில் வரை சென்று திரும்பி, அரங்கத்தில் நிறைவுற்றது. தொடர்ந்து ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள், செபமாலையின் முக்கியத்துவத்தைக் குறித்தும் அதை எவ்வாறு இளையோர்கள் சொல்லிப் பயன்பெற வேண்டும் என்றும் சிறப்பாகப் பேசினார்கள். பின்னர் இளையோரால் TAIZE வேண்டுதல் நடத்தப்பட்டது. செபத்தினிடையே, இளமையின் அழகு என்னும் தலைப்பில், கோட்டாறு மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஆல்வின் மதன்ராஜ் அவர்கள் ஆன்மீக உரை நிகழ்த்தினார்கள். இரவு, 9 மணியளவில் செபம் நிறைவுற்றது. பின்னர் இளையோருக்காக, சூசைபுரம் கிறியிவி பள்ளிக்கூட வளாகத்தில் வைத்து Buffet முறையில் உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உணவும் சுடரொளி களியாட்டமும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாநாட்டின் இறுதி நாள்

நிகழ்வானது 9 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, காலை 8.30 மணியளவில் காலை செபத்துடன் ஆரம்பமானது. பின்னர், தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்கத்தின் முன்னாள் இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ் அவர்கள் ஆபேல் என்னும் மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு தியான உரை நடத்தினார்கள். உரையின் இறுதியில் ஆராதனை நடத்தப்பட்டது. அருட்தந்தை மிஜோ புத்தன்புரைக்கல் அவர்கள் அதை வழிநடத்தினார். பின்னர், இளையோர் ஒப்புரவு அருளடையாளம் பெற்றனர்.
விழாவின் முக்கிய நிகழ்வான திருப்பலி பிற்பகல் 2.30 மணிக்கு, சீரோ மலபார் இளையோர் ஆணையத்தின் தலைவர், ஆயர் மார் ஜோசப் பண்டாரசேரி அவர்களின் தலைமையில், தக்கலை மறைமாவட்ட ஆயர், முன்னாள் இந்நாள் இயக்குநர் ஆகியோர் பங்கேற்க மிகச்சிறப்பாக நடைபெற்றது. 400 க்கும் மேற்பட்ட இளையோர் இந்நிகழ்வில் பங்கேற்றார்கள். இளையோரே, பாடல்களையும், முன்னுரைகளையும், காணிக்கை பவனிக்கான செபங்களையும் தயாரித்து மிகச்சிறப்புடன் செய்தார்கள். ஆயர் அவர்கள் பேசும் போது, இளையோர் மாநாடு போன்ற நிகழ்வுகள் இன்றைய காலத்தின் கட்டாயம் என்றும், இளையோர் தூய ஆவியின் வரங்களைப் பெற்று கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக வாழ வேண்டும் என்றும் கூறினார். ஆயர் மார் இராஜேந்திரன் அவர்கள், ஆயர் ஜோசப் அவர்களுக்கு நன்றிகூறினார்.
திருப்பலியைத் தொடர்ந்து பல்வேறு பங்குகளைச் சேர்ந்த இளையோரின் கலைவடிவங்கள் நடைபெற்றன.
இறுதியாக, ஆபேல் என்னும் மையக்கருத்தைக் கொண்ட கலைவடிவம் இளையோரால் மிகச்சிறப்பாக வழங்கப்பட்டது. நடனங்கள், பாடல்கள், இதர கலைவடிவங்கள் வழியாக நற்செய்தியின் விழுமியங்களோடு நிகழ்வுகளை நடத்தினார்கள். இறுதி நிகழ்வின் தொடக்கத்தில் ஆயர் ஜோசப் பண்டாரசேரி அவர்கள் இளையோரை வாழ்த்திப் பேசினார். நிகழ்வின் முக்கிய விருந்தினராக, இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் இளையோர் ஆணையத்தின் தலைவரும், கோட்டாறு மறைமாவட்ட ஆயருமான மேதகு நசரேன் சூசை அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு,

இளையோர் வாழ்வில் கொள்ள வேண்டிய விழுமியங்களை முன்வைத்து சிறப்புரை ஆற்றினார்.

**நன்றிகள்**

இளையோர் மாநாடு சிறப்பாக நடைபெற ஏராளமான நல்லுள்ளங்கள் உதவின. மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள், மாநாட்டின் தயாரிப்புகள் தொடங்கி உடனிருந்தார். மேலும் நிகழ்வு நடந்த மூன்று நாட்களும் இளையோரை சந்தித்து மூன்று முறை உரையாற்றினார். அவருக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றிகள். கூரியா உறுப்பினர்கள், ஒத்துழைப்பு கொடுத்ததோடு பல வேளைகளில் இளையோரை சந்தித்தார்கள். அவர்களுக்கு நன்றிகள். அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி தாளாளர் அருட்தந்தை ஆன்டணி ஜோஸ், அருட்தந்தை ஜெபனேஷ் என அனைத்து தந்தையர்களுக்கும் எங்கள் நன்றிகள். அருட்சகோதரிகளுக்கும் நன்றிகள். குறிப்பாக, பெண்கள் தங்க இடம் தந்த, எஸ்.எ.பி.எஸ் அருட்சகோதரிகளின் துணை மாகாணத் தலைவி அருட்சகோதரி ஆன்சிட் அவர்களுக்கும் அவரது துறவறச் சபையை சார்ந்த அருட்சகோதரிகளுக்கும் நன்றிகள். இளையோரின் ஆன்மீக வழிகாட்டியாக செயல்படும் அருட்சகோதரி லின்சிட்டா சி.எம்.சி அவர்களுக்கும் நன்றிகள். தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்கத்தின் மையக்குழு உறுப்பினர்கள், ஜினோ, அபிமோள், பபிஷா, ஜெசின் மற்றும் அஜீஷ் ஆகியோரின் கடின உழைப்பு மெச்சத்தக்கது. அவர்களோடு உழைத்த ஏராளமான இளையோர் உண்டு. அனைவருக்கும் நன்றிகள்.

**இளையோர் மாநாடு பகுப்பாய்வு**

ஜூன் 19, 2019 அன்று நடைபெற்ற குருக்களின் கூட்டத்தில், இளையோர் மாநாடு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. நிகழ்வுகளை மெச்சிய தந்தையர்கள், குறைகளையும் சுட்டிக் காட்டினர். அவர்கள் குறைகளாக, மறைமாவட்ட இயக்குநர்களின் தேவை, ஆன்மீகம் மற்றும தலைமைத்துவ பண்புகளின் குறைவு போன்றவைகளை முன்வைத்தார்கள்.

ஜூன் 23, 2019 அன்று நடந்த டிசி.ஒய்.எம் மத்தியக் செயற்குழுவின் போது, இளையோர் மாநாடு

குறித்து விவாதிக்கப்பட்டது. அருட்தந்தையர்கள் கூறிய விமர்சனங்களைக் கருத்தில் கொண்டு ஆக்கப்பூர்வமாக செயல்படுவதாக தீர்மானிக்கப்பட்டது.

**டி.சி.ஒய்.எம் பாதுகாவலரின் விழா**

தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்கத்தின் பாதுகாவலரான புனித தாமஸ் மூர் அவர்களின் விழா சில இளையோர் இயக்க அலகுகள் சிறப்பாக நடத்தின.

**வரவிருக்கும் நிகழ்வு**

இளையோர் தலைமையில் ஜூலை 20, 2019 அன்று நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தலம் நோக்கி, பாதங்களால் செபிப்போம் என்னும் மையக்கருத்தில் செபமாலை திருப்பயணம் நடத்தப்படுகிறது.

**பபீஷா, செயலர்**

## புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி கல்வியாண்டு தொடக்க விழா

தூய அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 2019-2020 கல்வி ஆண்டுக்கான தொடக்கவிழா ஜூன் 17, 2019 அன்று நடைபெற்றது. ஆயர் அவர்கள் தமது உரையில், இலக்குகளை நிர்ணயித்து அவற்றை அடையும் நோக்குடன் திட்டமிட்டு செயல்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

## மறைமாவட்டங்களுக்கு இடையேயான கூட்டம்

சங்ஙனாச்சேரி பிராந்திய மறைமாவட்டங்களுக்கிடையேயான கூட்டம், ஜூன் 25, 2019 அன்று காஞ்ஞிரப்பள்ளியில் வைத்து நடைபெற்றது. இதில் பேராயர்கள் மற்றும் ஆயர்கள், மார் ஜோசப் பெருந்தோட்டம், மார் ஜோசப் கல்லறங்காட், மார் ஜேக்கப் முரிக்கன், மார் மாத்யூ அறக்கல், மார் ஜோஸ் புளிக்கல், மார் பள்ளிக்காப்பறம்பில் மற்றும் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றார்கள். குருகுல முதல்வர்களும், பல்வேறு துறைகளைச் சார்ந்த தந்தையர்களும் பங்கேற்ற இக்கூட்டத்தில், தக்கலை மறைமாவட்டத்தின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் திருத்தொண்டுப் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. நம்முடைய மறைமாவட்டத்திலிருந்து பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்களும் அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் அவர்களும், தக்கலை மறைமாவட்டம் மேற்கொள்ளும் திருத்தொண்டுப் பணிகள் குறித்துப் பேசினார்கள்.



FAMILY APOSTOLATE
குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

**குடும்ப நல வாழ்வு மது அடிமைகள் மறுவாழ்வு மையம்**

கல்லுவிளை மது அடிமைகள் மறுவாழ்வு மையத்தில் மது மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகின்றன. இம்மையத்தில் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய 3 நாட்களும் மது மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகின்றன. முதல் மற்றும் மூன்றாவது திங்கட்கிழமைகளில் மதியம் 12.30 மணிக்கு மனநல மருத்துவர் வருகை புரிவார். இந்நாட்களில் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளலாம். இம்மையத்திலிருந்து 800 க்கும் மேறப்பட்ட மது நோயாளிகளும், மன நோயாளிகளும் சிகிட்சை பெற்று நலமடைந்துள்ளனர்.

**திருமண பயிற்சி வகுப்பு**

திருமண பயிற்சி வகுப்பு இரு மாதத்திற்கு ஒரு முறை மூன்றாவது வாரம் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய 3 நாட்கள் நடைபெறும். ஜூன் மாதம் 14 15 16 ஆகிய 3 நாட்களும் பயிற்சி நடைபெற்றது. 19 இளையோர்கள் இப்பயிற்சியில் பங்கெடுத்தனர். இப்பயிற்சியின் இடையில் சனிக்கிழமை மாலையில் மேதகு ஆயர் இளையோரை சந்தித்து 15 நிமிடம் உரையாற்றினர். கிறிஸ்தவ குடும்பங்களுக்கு உருகொடுக்கவும், குடும்பத்தில் கணவன் மற்றும் மனைவியிடையே அன்பும் ஜெபமும் கலந்த வாழ்வு அமையவும், அதன் வழியாக பங்கும் சமூகமும் நாடும் நலன் பெறவும் இம்மூன்று நாட்கள் பெரும் உதவியாக இருக்கும் என்று ஆயர் கூறினார். மேலும் அவர் தம் உரையில், தொடர்பு ஊடகங்களுக்கு அடிமையாகாமல் கிறிஸ்தவ குடும்பம் உருவாக்க உங்களால் இயலும் எனவும் வாழ்த்தினார். அடுத்த பயிற்சி ஆகஸ்டு மாதம் 16, 17, 18 ஆகிய 3 நாட்கள் நடைபெறும். பயிற்சி 16 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பித்து 18 ஞாயிற்றுக்கிழமை 2 மணிக்கு பெற்றோர்களுக்கான பயிற்சியுடன் நிறைவு பெறும். பயிற்சி கட்டணம்

ரூபாய் 750 ஆகும்.

**வீடு சந்திப்பு**

நமது தக்கலை மறைமாவட்டம் இல்வாழ்வு இயக்கத்தின் கீழ் வீடு சந்திப்புகள் முறையாக நடந்து வருகிறது. இதன் பகுதியாக கழுவன்திட்டை புனித மார்டின் டி போரஸ் ஆலய பங்கு மக்களின் வீடுகள், இயக்குநர் தந்தை அஜீஷ் அட்டியில் அவர்களின் அனுமதியுடன், ஷிகூீமேரி ஜாயிஸ் அவர்களின் வழிகாட்டுதலோடு 1-3-2019 அன்று தொடங்கி 23-5-2019 அன்று வரை சந்திக்கப்பட்டது. அருட்தந்தை ஷோஜோ அவர்களின் ஆசீயோடு 101 குடும்பங்கள் சந்திக்கப்பட்டன. அருட்தந்தை அவர்கள் ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். அருட்சாதனங்கள் பெறாத குடும்ப உறுப்பினர்கள் அருட்சாதனங்கள் பெற்றதோடு திருமணம் சரியாகாத 4 குடும்பங்கள் திருமணம் சரியாக்கப்பட்டது. மேலும் 10-6-2019 அன்று சுமார் 2.30 மணிக்கு உறவியங்களின் கூட்டம் தேவாலயத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு அருட்கன்னியர் மேரி ஜாயிஸ் அவர்கள் குடும்பங்கள் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதைப் பற்றி வகுப்பு நடத்தினார்கள். இயக்குநர் தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் திருப்பலி நிறைவேற்றியதோடு குடும்பங்களில் கணவன் மனைவி எப்படி வாழ வேண்டும் என்பதை கதை மூலம் விளக்கி மறையுரை ஆற்றினார்கள். பின்பு கூட்டம் 8 மணியளவில் இனிதே முடிவடைந்தது

**அருட்தந்தை அஜீஷ்**
**இயக்குநர்**

| புனித அல்போன்சா திருத்தல நிகழ்வுகள் ஜூலை - 2019 | |
|---|---|
| 19 | கொடியேற்றுதல் |
| 20 | நடைப்பயணம் |
| 24 | சீரோ மலங்கரை வழிபாட்டு முறையில் திருப்பலி |
| 27 | இலத்தீன் வழிபாட்டு முறையில் திருப்பலி - தலைமை: மேதகு ஆயர் நீதிநாதன், செங்கல்பட்டு. |
| 28 | மறைமாவட்ட திருப்பயண தினம்: ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் திருப்பலி மற்றும் திருப்பவனி. |

Kanyakumari Social Service Society

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

## SPARK 2019

EDUCARE திட்டத்தின் பயனாளிகளாக உள்ள ஏழை மாணவர்களுக்கான இவ்வாண்டிற்கான விடுமுறை பயிற்சி SPARK 2019, சங்கமத்தில் வைத்து மேய் 12 முதல் 25 வரை நடைபெற்றது. பயிற்சியை KKSSS துணை இயக்குநர் தந்தை எபின் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்தார்.

மாணவர்கள் 4 குழுக்களாக பிரிக்கப்பட்டு பயிற்சிகள் ஒருங்கிணைக்கப்பட்டன.

பயிற்சியின் இரண்டாம் நாளன்று ஆயர் அவர்கள் வருகை தந்து, மாணவர்களுடன் கலந்துரையாடல் நடத்தினார்.

SPARK 2019 பயிற்சியின் போது 3 ஆண்டுகள் Educare ஒருங்கிணைப்பாளராக செயலாற்றிய Sr. Reeja அவர்களுக்கு பிரிவு உபசார விழா நடத்தப்பட்டது.

Camp ன் முக்கிய நிகழ்வான Camp Fire 2019 புனித அல்போன்சா கல்லூரியின் மைதானத்தில் வைத்து நடைபெற்றது. இது வாழ்வின் உச்சகட்ட மகிழ்வின் வெளிப்பாடாக இருந்தது.

பேப்பர் பை மற்றும் பூ செய்தல் போன்ற கைவினைப் பொருட்கள் செய்யும் நிகழ்வும் நடைபெற்றது. மாணவர்களின் மனச்சோர்வுகள் நீக்குவதற்காக ஆற்றுப்படுத்துதல் நிகழ்வும் நடைபெற்றது.

ஆங்கிலப்பள்ளி மாணவர்களுக்கு இணையாக ஆங்கிலம் பேசவும் எழுதவும் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆங்கிலத்தில் எளிமையாக வார்த்தைகளை பயன்படுத்தி எவ்வாறு பேசலாம் என்பதைப் பற்றியும் வகுப்புகள் எடுக்கப்பட்டது.

Camp ன் இறுதி நிகழ்வு 2019, மே 25 அன்று நடைபெற்றது. மாணவர்கள் பயிற்சியின் மூலம் பெற்ற நலன்களைக் குறித்துப் பகிர்ந்தனர்.

**வருகையும் பிரிவும்**

KKSSS-ன் புதிய இயக்குநர் தந்தைக்கு வரவேற்பும் மற்றும் 6 களப்பணியாளர்களின் பணிநிறைவு விழாவும் மே 10 ஆம் தேதி KKSSS இயக்குநர் தந்தை சஜி எலம்பசேரி தலைமையில் நடைப்பெற்றது.

இரண்டு ஆண்டுகள் துணை இயக்குநராக பணியாற்றிய அருட்தந்தை வினு டி ஜோசப் அவர்கள் புளரி அச்சகத்திற்கு மாற்றலாகிச் சென்றார்.

அவருக்குப் பதிலாக அருட்தந்தை தோமஸ் பூவத்து மூட்டில்

அவர்கள் நியமிக்கப்பட்டார். அத்தோடு 58 வயது நிறைவு பெற்ற களப்பணியாளர்கள் 6 பேருக்கு பணி நிறைவு விழா அனுசரிக்கப்பட்டது. அவர்கள் தங்களுடைய பணியின் வேளையில் பெற்ற இனிய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

## GO GREEN

ஒவ்வொரு வருடமும் ஜுன் மாதம் 5 ஆம் தேதி உலக சுற்றுச் சூழல் தினமாக கொண்டாடப்படுகிறது. இந்த வருடம் KKSSS இதனை GO GREEN எனும் பெயரில் ஒரு வருட கால கொண்டாட்டமாக நடத்துகிறது. GO GREEN திட்டம் இதே தினம் ஆசீர் அரங்கத்தில் வைத்து ஆயர் அவர்களின் துறவற வாழ்வின் வெள்ளிவிழா வேளையில் தொடங்கப்பட்டது. அத்தோடு அனைவருக்கும் இலவச மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

**மருத்துவ முகாம்**

மக்களின் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு 'நலமும் நல்வாழ்வும்' திட்டத்தன் மூலம் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சார்பில் பல்வேறு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. இதன் பகுதியாக இவ்வாண்டு, சாம்கோ மருத்துவமனையோடு இணைந்து 26.06.2019 அன்று முஞ்சிறை தூய ஜார்ஜியார் திருத்தல வளாகத்தில் வைத்து 'இலவச புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் கண்டறிதல் முகாம்' நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கன்னியாகுமரி சமூக சேவை சங்க துணை இயக்குநர் அருட்தந்தை எபின் அவர்கள் தலைமை ஏற்றார்கள். புனித ஜார்ஜியார் ஆலய பங்குத்தந்தை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். சாம்கோ மருத்துவனை மருத்துவர் வினோத் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். இம்முகாமில் கண் விழித்திரை, கிட்டப்பார்வை, தூரப்பார்வை, கண்புரை ஆகிய கண் சம்மந்தப்பட்ட பரிசோதனைகள் அளிக்கப்பட்டன. இதில் கள ஒருங்கிணைப்பாளர் செல்வன் அஜின், களப்பணியாளர் திருமதி மேரி, விமலா மற்றும் குழு உறுப்பினர்கள், பொது மக்கள் என சுமார் 120 பேர் கலந்து கொண்டனர்.

**அருட்தந்தை சஜி**

# செங்கோட்டைச் செய்திகள்

**விடுமுறை விசுவாசப் பயிற்சி விழா**
செங்கோட்டை மறைப்பரப்புத் தளங்களில் உள்ள அனைத்து பங்குகளிலிருந்தும் மறைக்கல்வி மாணவர்களை ஒருங்கிணைத்து, வாஞ்சி ஆலயத்தில் வைத்து 6.5.2019 முதல் 10.5.2019 முடிய உள்ள 5 நாட்கள் வி.பி.வி. நடத்தப்பட்டது. அருட்சகோதரர் ஆல்பின் ஜோஸ் அவர்கள் அதற்கான ஆடல், பாடல் விளையாட்டு பயிற்சிகளை அளித்தார். வகுப்புகளும் நடத்தப்பட்டன. போட்டிகள் நடத்தப்பட்டு வென்றவர்களுக்கு இறுதியில் பரிசுகள் வழங்கப்பட்டன. இதனை செங்கோட்டைத் திருத்தொண்டுத் தளங்களுக்கான மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை செபி மற்றும் ஊக்குவிப்பாளர் அருட்சகோதரி லீனா சி.எம்.சி ஆகியோர் பொறுப்பேற்று நடத்தினர்.

**இளையோர் இயக்கம்: ஒருநாள் சுற்றுலா**
செங்கோட்டை இளையோர் இயக்க உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து மே 21 ஆம் தேதி ஒருநாள் சுற்றுலா சுற்றுலா பயணத்தை மேற்கொண்டனர். 14 இளையோர்கள் இதில் பங்கேற்று உறவுகளை மேம்படுத்தி மகிழ்ந்தனர்.

**ஆயர் சந்திப்பு மற்றும் மறைப்பரப்புப் பணியாளர்களின் கூட்டம்**
தக்கலை மறைமாவட்டம் விரிவாக்கப்பட்ட பின்பு மறைத்தூதுப் பணிக்காக பல இடங்களில் பணியாற்றுகின்ற அருட்பணியாளர்கள் மற்றும் அருட்சகோதரிகளின் கூட்டமானது 24.06.2019 அன்று பண்பொழி டொரேத்தியன் கன்னியர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆயர் அவர்களும் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஆராதனையைத் தொடர்ந்து கூட்டமானது ஆரம்பமானது. கூட்டத்தில் ஆயர் அவர்கள், பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்களை அறிமுகம் செய்து வைத்து, தந்தை அவர்கள் செங்கோட்டை மற்றும் புதிதாக தொடங்கப்பட்டிருக்கும் மறைத்தளங்களில் ஒருங்கிணைப்பாளராக

நியமிக்கப்பட்டிருப்பதை அறிவித்தார்.

இந்த பொது கூட்டங்கள் எவ்வாறு அமைய வேண்டும் எனவும், மறைத்தள பணிகளைப்பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது. அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் அவர்கள் மற்றும் மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் இருந்து வந்திருந்த அருட்தந்தையர்கள் மற்றும் அருட்கன்னியர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்தனர். ஆயர் அவர்கள் மறைத்தூது பணிகளைப்பற்றி உரை ஆற்றினார். அதன் பின்பு அருட்தந்தை தோமஸ் தக்கலை அவர்கள் நன்றி கூற கூட்டம் நிறைவடைந்தது.

## கன்னியாகுமரித் திருத்தொண்டுத் தளங்களின் முன்னோடியாகத் திகழ்ந்த அருட்தந்தை சிரியக் கூட்டும்மேல் மறைவு

சங்ஙனாச்சேரி உயர் மறைமாவட்டத்தின் குருவான அருட்தந்தை சிரியக் கூட்டும்மேல் அவர்கள் ஜூன் 26, 2019 அன்று இறையடி சேர்ந்தார். இன்றைய தக்கலை மறைமாவட்டமான, குமரி மிஷனில் 1973 முதல் 1995 வரை தன்னலமின்றி இறைப்பணி செய்தார். குமரி மக்களை அன்பு செய்த அவர் அடித்தட்டு மக்கள் வாழ்வில் ஏற்றம் பெற, திட்டங்கள் வகுத்து அவற்றை சரிவர நடைமுறைப்படுத்தினார். அவருடைய நல்லடக்கச்சடங்கு ஜூன் 29, 2019 அன்று நெடுமுடியில் வைத்து நடைபெற்றது. ஆயர் அவர்கள் அருட்தந்தை அவர்கள் குமரி மண்ணில் புரிந்த ஒப்பற்ற சேவைகளை மெச்சி உரை நடத்தி, செபித்தார்

## அருட்சகோதரி சோபி ரோஸ் எஸ். எச். மறைவு

சங்ஙனாசேரி மாகாணத்துக்குட்பட்ட திருஇருதயச் சபை அருட்சகோதரி சோபி ரோஸ் எஸ்.எச் அவர்கள் ஜூன் 26, 2019 அன்று இறையடி சேர்ந்தார். 1969 ஆம் ஆண்டு குமரி மண்ணில் காலடி எடுத்து வைத்த அவர், 50 ஆண்டுகளுக்கு மேல் மறைமாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், இடர்களின் நடுவில் சேவை செய்தார். அவருடைய இறுதிச் சடங்கு பாறேல் திரு இருதய மாகாண இல்லத்தில் வைத்து ஜூன் 26, 2019 அன்று நடைபெற்றது. திருப்பலியை தலைமையேற்று நடத்திய தக்கலை மறைமாவட்ட ஆயர் அவர்கள், அருட்சகோதரியின் பணியைப் பாராட்டி உரை நடத்தினார்.

## தகவல்கள்

1. அருட்தந்தை ஜினு ஜேக்கப் அவர்கள், முனைவர் பட்டப் படிப்புக்காக ஜூன் 26, 2019 அன்று உரோமைக்குச் சென்றார்.
2. திருத்தொண்டர் ஷிஜோ அவர்கள் தமது இறையியல் மற்றும் முதுகலை படிப்புகளை முடித்து விட்டு, உரோமையிலிருந்து, ஜூலை 3, 2019 அன்று மறைமாவட்டத்திற்குத் திரும்புவார். அவர் சில தயாரிப்புகளுக்குப் பின்னர் 2019, டிசம்பரில் குருவாக திருநிலைப்படுத்தப்படுவார்.
3. ஜூலை 3, 2019 அன்று மாறப்பாடி புனித தோமையார் ஆலயம் பொன்விழாக் கொண்டாட்டத்தை ஆரம்பிக்கிறது.
4. மாலைக்கோடு அருகாமையில் உள்ள குட்டைக்கோட்டில் திருத்தொண்டுப் பணிகள் ஆரம்பித்து ஐந்து ஆண்டுகள் நிறைவடையும் இவ்வேளையில் ஜூன் 20, 2019 அன்று முதல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.
5. இளங்குருமடத்தின் 2019–2020 ஆம் கல்வி ஆண்டுக்கான தொடக்கவிழா ஜூன் 22, 2019 அன்று நடத்தப்பட்டது. இவ்வாண்டு புதிதாக, 6 மாணவர்கள் இணைந்துள்ளனர். இவர்களுள் இருவர் நமது மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மற்ற நால்வரும் கேரளாவைச் சேர்ந்தவர்கள்.
6. **துறைகளுக்கிடையேயான கூட்டம்**: மறைமாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு துறைகளின் இயக்குநர்களின் கூட்டம் ஜூன் 27, 2019 அன்று தக்கலை ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது.
7. **கும்பம் திருத்தொண்டுத் தளம்**: கும்பம் திருத்தொண்டுத் தளம் ஆகஸ்ட் 2, 2019 அன்று ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இத்தளத்தின் பணிகளை காஞ்சிரப்பள்ளி மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மேற்கொள்வார்கள். இடுக்கி மாகாணத்தைச் சேர்ந்த எப்.சி.சி துறவறத்தார் தங்கள் பணிகளை அங்கே மேற்கொள்வார்கள்.
8. **நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தலத் திருவிழா**: ஜூலை 19, 2019 அன்று கொடியேற்றத்துடன், நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தலத் திருவிழா தொடங்க இருக்கிறது. தக்கலை இளையோரால் முன்னெடுக்கப்படும் திருத்தலம் நோக்கிய நடைப்பயணம் 20, 2019 அன்று நடைபெறும். மறைமாவட்ட மக்கள் அனைவரும் சேர்ந்து ஒப்புக்கொடுக்கும் இறுதி நாள் திருப்பலி ஜூலை 28, 2019 அன்று நடைபெறும்.

# Educational Ministry
# கல்விப் பணி



**தேசியக் கல்விக் கொள்கை 2019 - கருத்தாய்வு**

கோட்டாறு, குழித்துறை, தக்கலை மற்றும் மார்த்தாண்டம் மறைமாவட்டங்கள் இணைந்து நடத்திய தேசியக் கல்விக் கொள்கை கருத்தாய்வானது 22-6-2019 அன்று சுங்கான்கடை புனித சவேரியார் பொறி-யியல் கல்லூரியில் வைத்து நடைபெற்றது. இதில் 4 மறைமாவட்டங்களை சார்ந்த 415 பேர் கலந்து கொண்டனர். மறைமாவட்ட மேதகு ஆயர் ஜெறோம் தாஸ் வறுவேல் அவர்கள் வருகை தந்தார். துவக்க விழாவின் ஆரம்பமாக புனித அல்போன்ஸா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியைச் சார்ந்த மாணவிகளின் இறைவணக்க நடனத்தைத் தொடர்ந்து மேதகு ஆயர்கள் குத்துவிளக்கினை ஏற்றி வைக்க மார்த்தாண்டம் மறைமாவட்ட அனைத்துப் பள்ளிகளின் தாளாளர்



நிகழ்வின் துவக்கமாக காலை 9 மணியளவில் பெயர்பதிவு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து கருத்தாய்வினை துவங்கி வைப்பதற்காக கோட்டாறு அருட்தந்தை ஆல்பின் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். அதைத் தொடர்ந்து மேதகு ஆயர் நசேரன் சூசை அவர்கள் துவக்க உரை ஆற்றி சிறப்பித்தார்கள்.

மேலும் மேதகு ஆயர் ஜெறோம் தாஸ் வறுவேல் அவர்கள் தலைமை உரை ஆற்ற, துவக்க விழாவானது 10.30 மணி அளவில் நிறைவுற்றது. காலை 10.30 முதல் 11.30 மணி வரை அமர்வு 1-ல் கருத்துரையாளர் திரு பிரின்ஸ் கஜேந்திர பாபு (கல்வியாளர் சென்னை) மற்றும் நெறியாளர் திரு மரியதாஸ் (தாளாளர் அருளாளர் தேவசகாயம் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் உண்ணாமலைக்கடை) அவர்கள் தலைமையில் 'தேசியக் கல்விக் கொள்கை 2019 - வரைவு' பின்னணி பற்றிய கருத்தாய்வு நடைபெற்றது. பின்னர் அமர்வு 2-ல் திரு பிரின்ஸ் கஜேந்திர பாபு (கல்வியாளர் சென்னை) 'தேசிய கல்வி கொள்கை 2019' - பள்ளிக்கல்வி குறித்த கலந்தாய்வினை முன்னெடுத்துச் சென்றார். அதைத் தொடர்ந்து கேள்வி நேரம் நடைபெற்றது. பின்னர் உணவு இடைவேளை வழங்கப்பட்டு அதைத் தொடர்ந்து, அமர்வு 3-ல் 'தேசியக் கல்விக் கொள்கை 2019' - உயர்கல்வி குறித்த கலந்தாய்வினை கருத்துரையாளர் பேராசிரியர் டன்ஸ்டன் (கல்லூரி வளர்ச்சி இயக்குநர்) மற்றும் நெறியாளர் திரு மரிய வில்லியம் (தாளாளர் புனித சவேரியார் பொறியியல் கல்லூரி அனந்தநாடார்குடி) தலைமையில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து கேள்வி நேரம் மற்றும் பதில் அறிக்கை சமர்ப்பித்தலும் நடைபெற்றது. மேலும் தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நன்றி நவிலும் நிகழ்வானது நடைபெற்றது. நிகழ்வின் இறுதியாக மேதகு ஆயர் அவர்கள் வாழ்த்துரை வழங்கிய பின் கருத்தரங்கில் பங்கேற்று கருத்துரை வழங்கிய கருத்துரையாளர்களுக்கு நினைவு பரிசினை வழங்கி சிறப்பித்தார்கள். அதன் பின்னர் நன்றியுரை மற்றும் தேசிய கீதத்துடன் கருத்தாய்வானது மாலை 4 மணியளவில் நன்முறையில் நிறைவுற்றது.

**கல்வியாண்டின் துவக்கவிழா மற்றும் ஆசிரியர்களுக்கான ஒருநாள் தியானம்**

2019- 2020 ஆம் ஆண்டின் துவக்கவிழா மற்றும் ஆசிரியர்களுக்கான ஒருநாள் தியானம் 1-6-2019 சனிக்கிழமை அன்று கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் வைத்து நடை பெற்றது. இதில் தக்கலை

மறைமாவட்டத்திற்குட்பட்ட பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சார்ந்த ஆசிரியர்கள் 600 பேர் கலந்து கொண்டனர். நிகழ்வானது காலை 9.30 மணி அளவில் பெயர்ப்பதிவுடன் ஆரம்பமானது. கல்வியாண்டினை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றுவதற்காக மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் மற்றும் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்கள். நிகழ்வின் துவக்கத்தில் இறைவணக்கப்பாடல் பாடப்பட்டது. அதைத் தொடர்ந்து மேதகு ஆயர் அவர்கள் மற்றும் குருகுல முதல்வர் அவர்களும் குத்துவிளக்கை ஏற்றி வைக்க, அதைத்தொடர்ந்து அரசு உதவி பெறும் பள்ளிகளின் முன்னாள் இன்னாள் தாளாளர்களான அருட்தந்தை ஜோண்சிலால் மற்றும் அருட்தந்தை ஜாண் பால் அவர்களும் குத்துவிளக்கை ஏற்றி வைத்து சிறப்பித்தார்கள். அருட்தந்தை ஜோண்சிலால் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேச அதன் பின் ஆயர் அவர்கள் ஆசிரியர்கள் இணைந்திருந்து கனிதருபவர்களாக இருக்க வேண்டும் என்றும் இன்றைய கல்விச் சூழலில் ஆசிரியர் ஒவ்வொருவரும் மாணவர்களுக்கு சிறந்த ஆற்றுப்படுத்துபவராக இருக்க வேண்டும் என்றும் சிறப்புரை ஆற்றினார்கள். உரையின் முடிவில் வகுப்பில் தேர்ச்சி பெற்ற உளவியல் ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்கள். பின்னர் நமது மறைமாவட்ட பள்ளிகளில் புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட தாளாளர் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு வரவேற்பு வழங்கப்பட்டது. அதன் பின்னர் முன்னாள் தாளாளரான அருட்தந்தை ஜோண்சிலால் அவர்களை தலைமை ஆசிரியர் சிங்கராயர் அவர்கள் வாழ்த்திப் பேச ஆயர் அவர்களால் பரிசும் வழங்கப்பட்டது. பின்னர் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் நன்றி கூற விழாவானது நிறைவுற்றது. தேனீர் இடைவேளைக்குப் பிறகு ஆசிரியர்களுக்கான ஒரு நாள் தியானமானது அருட்தந்தை ஜார்ஜ் சின்னப்பா அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தியானமானது மாலை 4 மணியளவில் நிறைவுற்றது.

**கார்மல் மாதா மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி ஜூன் மாத செயல்பாடுகள்**

3-6-2019 அன்று 2019-20 ஆம் ஆண்டின் தொடக்கவிழா கொண்டாடப்பட்டது. அருட்பணி டனிஸ்டன் அவர்கள் மாணவர்களுக்கு சிறப்பு செய்தி வழங்கி ஆசீர் வழங்கினார்கள். 10-6-2019 அன்று மழலையர் பள்ளியின் தொடக்கவிழா கொண்டாடப்பட்டது. புதிய மாணவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. 14-6-2019 அன்று அருணாச்சலா மகளிர் பொறியியல் கல்லூரியின் முதல்வர் ஜோசப் ஜெவகர் அவர்களால் 10 11 12 மாணவர்களுக்கு வாழ்வியல் கல்வி பற்றிய சிறப்பு கலந்தாய்வு நடைபெற்றது. 21-6-2019 யோகா தினத்தை முன்னிட்டு சிறப்பு யோகா பயிற்சி அளிக்கப்பட்டது.

## நாகர்கோவில் அல்போன்சா பள்ளி

**ஆசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி**

இந்தக் கல்வி ஆண்டிற்கு ஆசிரியர்கள் தங்களைத் தாயாரிக்கும் பொருட்டு மே மாதம் 15 ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரை பல்வேறு வகையான பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் பேரருட்தந்தை ஸ்டீபன் அவர்களின் வழிகாட்டலில் இரண்டு நாள் தியானம் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட அருட்தந்தை ஜினோ ஜேக்கப் அவர்களின் கற்றல் கற்பித்தலின் புதிய அணுகுமுறை மற்றும் ஊடகங்கள் பற்றிய கருத்தமர்வுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டது. XEED நிறுவனத்தின் கற்பித்தல் பயிற்சியும் EDUCOM நிறுவனத்தாரால் கணினி பயிற்சியும் வழங்கப்பட்டது. மேலும் முனைவர் இராபின்சன் அவர்களால் ஆங்கில பயிற்சி வழங்கப்பட்டது. ஆசிரியர் உளவியல் பாங்கினை வளர்க்க செபின் எஸ். கொட்டாரம் அவர்களின் ஆற்றுப்படுத்துதல் பயிற்சி வழங்கப்பட்டது.

**வரவேற்பு மற்றும் பாராட்டுவிழா**

மே மாதம் 31-ம் தேதி இக்கல்வியாண்டுக்கான முதல் ஆசிரியர் கூட்டம் நடைப்பெற்றது. இதில் அல்போன்சா பள்ளியின் புதிய தாளாளராகப் பொறுப்பேற்ற பேரருட்தந்தை சனில் ஜாண் அவர்களுக்கு வரவேற்பும், இதற்கு முன் இப்பொறுப்பில் இருந்து கடந்த 26 ஆண்டுகளாக அல்போன்சா

பள்ளியின் வளர்ச்சிக்காய் அயராது உழைத்து இப்போது தக்கலை மறைமாவட்டத்தின் குருகுல முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும் பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில் அவர்களுக்கும் நன்றிகளும் வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் தக்கலை மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களும் கலந்து கொண்டு தனது கருத்துரையை வழங்கினார். தொடர்ந்து நடைபெற்ற பாராட்டு விழாவில் சென்ற கல்வியாண்டில் 10, 11, மற்றும் 12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் பள்ளி அளவில் சிறந்த மதிப்பெண்களைப் பெற்றவர்களைப் பாராட்டும் விதமாகப் பாராட்டுவிழாவிற்கு ஏற்பாடுசெய்யப்பட்டது.

**சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவர்கள்**

10–வகுப்பு எ.ஜி. ரோஷன், எல். ரேஷ்மி லியோ, எஸ். ஸ்வேத்தா

11–வகுப்பு எஸ். காவியப்பி–ரியா, எம். கிரிஷா, ஜி. எஸ். வித்தியார்த்

12–வகுப்பு ஜி. எ. நேத்திர வர்ஷா, சி. பிரிய தர்ஷ்னி, ஆர். சரண்யா

பாராட்டு விழாவில் சிறந்த மதிப்பெண்களைப் பெற்ற அனைவருக்கும் விழாத்தலைவர் மேதகு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் பாராட்டிப் பரிசுகள் வழங்கினார். மேலும் தக்கலை மறைமாவட்ட முதன்மைப் பணியாளர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் பூங்கொத்து கொடுத்து வாழ்த்தினார்.

மேலும் இப்பள்ளியில் பயின்று வரும் மாணவன் எ.ஜி. ரோஷன் 2019 ஆண்டுக்கான ழி.ஜி.ஷி.ணி. தேர்வில் 200 மதிப்பெண்களுக்கு 174 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் 7–வது இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இத்தகைய வெற்றிகளைப் பெற்றுத்தந்த மாணவ மாணவிகளையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்த ஆசிரியர்களையும் மாணவர்களின் பெற்றோர்களையும் விழாவில் மேதகு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர் பேராசிரியர் சந்திரபோஸ் அவர்களும் ஆசிரியர் திருமதி. மரிய கிறிஸ்டி ஜேஸ்மின் அவர்களும் பாராட்டிப் பேசினர்.

**புதிய கல்வியாண்டின் உதயம்**

இக்கல்வியாண்டின் முதல் நாளான ஜூன் 3-ஆம் தேதி காலை கூட்டமானது சிறப்பு வழிபாட்டோடு தொடங்கியது. மேலும் அன்றைய தினத்தில் இந்தக் கல்வியாண்டிற்கான சிறப்பு விருதுவாக்கான 'Transform' என்னும் சொல்லாடல் பள்ளி தலைமையாசிரியர் திருமதி. மோனிக்கா ஸ்பினோலா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் புதிய ஆசிரியர்களுக்கு மலர் கொடுக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டார்கள். இந்த முதல்நாள் சிறப்புக்கூட்டத்தில் துணைமுதல்வார் திருமதி. பிரேம்கலா வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சி இறுதியில் கல்வி ஒருங்கிணைப்பாளர் திருமதி. ஜெமுனா பென்னட் அவர்கள் நன்றி கூறினார். மேலும் தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வரும் தக்கலை மறைமாவட்ட பள்ளிகளின் மேலாளருமான பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில் அவர்களும் தாளாளர் பேரருட்தந்தை சனில் ஜாண் அவர்களும் பள்ளி முதல்வர் அருட்சகோதரி லிஸ்பெத் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினார்கள். மேலும், விழாவில் துணைமுதல்வர் அருட்தந்தை அஜின்ஜோஸ், மேல்நிலைப்பிரிவு கல்வி ஒருங்கிணைப்பாளார் முனைவர் இராஜையன், உயர் நிலைப்பிரிவு கல்வி ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி ஜினா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நாள் நிகழ்வுகள் அனைத்தும் மாணவர்கள் தங்களுக்குள் புதிய தீர்மானங்களை எடுத்துக்கொள்வதற்கும் சிறந்த உத்வேகத்தோடும் புதிய ஆற்றலோடும் உழைக்கும் மனநிலையை வளர்ப்பதற்கும் ஏதுவாக அமைந்தன.

| ஜூலை 2019 - வரவிருக்கும் நிகழ்வுகள் | |
|---|---|
| 8 | இளங்குருக்களுக்கான நிகழ்நிலையாக்கல் பயிற்சி |
| 9 | குருக்களின் கூட்டம் |

# மறைவட்ட செய்திகள்




## மஞ்சாலுமூடு மறைவட்டம்

### தக்கலை மறைமாவட்டத்தின் 'எ' பிரிவில் சிறந்த மறைக்கல்வி நிலையம்

2018–2019 ஆம் ஆண்டுக்கான எ பிரிவில் சிறந்த மறைக்கல்வி நிலையமாக மஞ்சாலுமூடு புனித குழந்த தெரசா மறைக்கல்வி நிலையம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சிறந்த ஆசிரியர்கள் பிரிவில் இரண்டாம் இடம் கிடைத்தது.

## காரோடு

2019–2020 ஆம் மறைக்கல்வி கல்வி ஆண்டு 02.06.2019 அன்று தொடங்கப்பட்டது.

பெந்தக்கோஸ்து திருவிழாவிற்கு ஆயத்தமாக 07.06.2019 அன்று சிறப்பு ஆராதனை நடைபெற்றது. அருட்தந்தை ஜினு தெக்கேத்தலா அவர்கள் தியானத்தை வழிநடத்தினார்.

## சூசைப்புரம் மறைவட்டம்

### கிள்ளியூர்

2–6–2019 அன்று மறைக்கல்வி பங்குத்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது. 7–6–19 அன்று மறைக்கல்வி ஆசிரியர்களின் கூடுகை பங்குத்தந்தை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. உறவியம் வா–யிலாக வீடுகளையும் ஒவ்வொரு வாரங்களில் சந்தித்து மந்திரித்தல் நடைபெற்றது. அதை தொடர்ந்து வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் மதியம் 2 மணிக்கு சிறப்பு உறவிய கூட்டம் ஆலயத்தில் வைத்து நடைபெறும். 30–6 19 அன்று பங்குப் பேரவைக்கூட்டம் நடைபெற்றது. அதில் திருவிழாவின் பொறுப்புகள் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

### பாலப்பள்ளம்

2–6–19 அன்று மறைக்கல்வி தொடக்கவிழாவில் ஆசிரியர்கள் மெழுகுவர்த்தி கையில் ஏந்தி உறுதி மொழி எடுத்தும்; மாணவர்கள் வகுப்பு ஆசிரியர்களின் காலில் தொட்டு ஆசீர்வாதமும் பெற்றனர். 9–6–19 அன்று புதியதாக பொறுப்பேற்ற தலைமையாசிரியை அருட்சகோதிரி லின்ஸ் SABS அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. 11–6–19 அன்று செவ்வாய்கிழமை ஆலய குருசடியில் முதன்முதலாக சிறப்பு ஜெபமாலை வழிபாடு பங்குத்தந்தை ஜாண்பால் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 23 ஆம் தேதி உறவிய தலைவர்களின் சிறப்பு கூடுகை நடைபெற்றது. 30 ஆம் தேதி வீடுகளில் சென்று படுக்கை நோயாளிகளுக்கு நற்கருணையும் வழங்கினர்.

# BIRTHDAYS & FEASTDAYS OF REV FATHERS

## FEAST DAYS - JULY

| | |
|---|---|
| Fr. Thomas Powathuparampil | 03 |
| Fr. Robins Kuzhikodil | 03 |
| Fr. Jiji Koipuram | 03 |
| Fr. Thomas Sathianesan | 03 |
| Fr. Ajeesh Attiyil | 03 |
| Fr. Abin Poovathummoottil | 03 |
| Fr. Thomas Jebanesh | 03 |
| Fr. Thomas Moolechalil (Pala) | 03 |
| Fr. Thomas Thekkethala CMI | 03 |
| Fr. Tinu Kottackaparampil CMI | 03 |
| Fr. Thomas Pockavarayath CMI | 03 |
| Fr. Kurian Mathew Koipuram | 15 |
| Fr. Linslal Mangalath | 15 |
| Fr. Rajesh Vayalumkal MCBS | 15 |
| Fr. Shojo Erupathanchilchira | 25 |
| Fr. Jacob Aiyammatra | 25 |
| Fr. Toji Parambilparambil | |
| Fr. Chacko Akkathara | 25 |
| Fr. Vinod Kanakalil | 25 |
| Fr. Anoop Karingadu MCBS | 25 |

## BIRTH DAYS - JULY

| | |
|---|---|
| Fr. Mathew Mulangasserry | 07 |
| Fr. Thomas Jebanesh | 07 |
| Fr. Thomas Moolechalil (Pala) | 21 |

# BISHOP'S ENGAGEMENTS JULY 2019

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Mon | 10.00 am | Aluva, Choondi: Marriage Function |
| 2 | Tue | 10.30 am | Kayalpuram: Anniversary Holy Qurbana |
| 3 | Wed | 05.00 pm | Marappadi: Feast Day Holy Qurbana |
| 4 | Thu | 05.00 pm | Muzhucode: Holy Qurbana |
| 5 | Fri | | Bishop's House |
| | | 05.30 pm | Koodankulam: Feast day Holy Qurbana and Flag Hoisting |
| 6 | Sat | 10.00 am | Coimbatore: TNBC |
| 7 | sun | 09.30 am | Coimbatore: TNPCRI |
| 8 | Mon | 07.00 am | Coimbatore: TNBC |
| | | 10.00 am | Sangamam: Orientation Programme for Junior Priests |
| 9 | Tue | 07.00 am | Coimbatore: TNBC >>Thuckalay |
| | | 01.00 pm | Sangamam: Orientation Programme for Junior Priests & Priests' Conference |
| 10 | Wed | 09.30 am | Bishop's House: Eparchial Curia Meeting |
| | | 02.00 pm | Bishop's House: Meeting with Priests |
| 11 | Thu | 10.00 am | Bishop's House: Visit of Mr. George Nelli |
| | | 06.00 pm | Bengiri: Feast Day Holy Qurbana |
| 12 | Fri | 04.00 pm | >>Kannur |
| 13-14 | Sat-sun | 10.00 am | Kannur: House Blessing / Visiting Brothers at Kunnoth Seminary >>Thuckalay |

| | | | |
|---|---|---|---|
| 15 | Mon | 06.00 pm | Mukkoottukal: Holy Qurbana at St. Mary's Minor Seminary |
| 16 | Tue | 09.30 am | Bishop's House: Visitor from Qatar |
| 17 | Wed | 09.30 am | Bishop's House: Meeting Priests |
| 18 | Tue | 09.30 am | Bishop's House: Meeting Priests |
| 19 | Fri | 05.00 pm | Nagercoil : Flag Hoisting at St. Alphonsa's Shrine |
| | | 06.00 pm | Thuckalay: Feast Day Holy Qurbana at St. Elias Church |
| 20 | Sat | 06.00 am | Nagercoil: Alphonsa Nadai Payanam |
| | | 07.00 pm | Cheriyakollai: Anniversary and Blessing of Michael Developers |
| 21 | Sun | 08.00 pm | Vavarai: Holy Qurbana at Carmel Mount Church |
| 22 | Mon | 05.30 pm | Visiting Parishes |
| 23 | Tue | 05.30 pm | Visiting Parishes |
| 24 | Wed | 09.30 am | Madurai: Visit to Missions >> Virudunagar and Thirunelveli |
| 25 | Thu | 07.00 am | Bishop's House: Eparchial Curia Meeting |
| 26 | Fri | | Shenkottai: Visit to Shenkottai Mission and Meetings |
| 27 | Sat | 05.00 pm | Nagercoil :Holy Qurbanan by Bishop Neethinathan, Diocese of Chengelpett |
| 28 | Sun | 09.30 am | Nagercoil: Holy Qurbana at St. Alphonsa's Shrine |
| 29 | Mon | 05.30 pm | Visiting Parishes |
| 30 | Tue | 05.30 pm | Visiting Parishes |
| 31 | Wed | | Prayer day |

Fr. Sajan Nettaponghu
Bishop's Secretary

12 JUNE 2019
NEW MISSION
KAYATHAR









15 JUNE 2019
SABS NEW CONVENT
THIRUNELVELI

16 JUNE 2019
CATECHISM
ANNUAL DAY










**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570